**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 17

Name : திரு. வினிஷ்பாபு

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:17.06.2026

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது கன்னியாகுமரி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 14.12.2021ம் தேதி 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கபிரியேல் மகன் பாலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.441/2021 பிரிவு சந்தேக மரணம் என முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.6. அசலைநீதிமன்றததிற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் எதிரி கட்டையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னதாக இறந்த போன ஸ்டாலின் பிரேதம் கிடந்த இடத்திற்கு போலீசார் சென்றார்கள். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக இந்த புகார் கொடுப்பதற்கு முன்னர் வேறு புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. புகாரிலுள்ள சங்கதிகளின் படி தான் நான் சந்தேக மரணம் என வழக்கு பதிவு

செய்தேன். புகார்மனு நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. முதல்புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352 /2023**

**Deposition of P.W.** 18

Name : திருமதி.உமா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:17.06.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது நிலைய சார்பு ஆய்வாளர் திரு. வினிஷ்பாபு என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.441/2021 பிரிவு 174 கு.வி.மு.ச படியான வழக்கை 14.12.2021ம் தேதி 09.30 மணிக்கு வழக்கு கோப்பை பெற்று 10.00மணிக்கு சம்பவஇடமான வாதியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் வின்சென்ட், ஜாக்சன் டேவிட் ஆகியவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 பின்னர் சம்பவ இடத்திலிருந்து கருங்கல் ஒன்றும், பாறை கம்பி ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.9. 11.30 மணிக்கு இறந்து போன ஸ்டான்லி பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்று சாட்சிகள் டேவிட்ராஜ, சுரேஷ்குமார் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10. பின்னர் பிரேதத்தை கைப்பற்றி

குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு வைத்து 12 மணி முதல் 13.30 மணிவரை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அ.சா.ஆ.11. பின்னர்பிரேத பரிசோதனைக்காக தலைமைக்காவலர் 1584 திரு. ஜஸ்டின்ராஜ் என்பவர்மூலமாக வேண்டுதல் கடிதம் கொடுத்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் பாலன், தங்கம், சிபிலிக், செல்வன், எல்டோஸ் பிரினு, சிலுவை மணி, சபீனா, சிஜு, நெல்சன், வின்சென்ட், ஜான்சன் டேனியல், டேவிட்ராஜ், சுரேஷ்குமார், உதவி ஆய்வாளர் திரு. வினிஷ்பாவு ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் புலன் விசாரணை முடிவடைந்து இவ்வழக்கின் சட்ட பிரிவை பிரிவு 174 கு.வி.மு.ச– விலிருந்து 294(பி), 324, 306 இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டம் மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12. பின்னர் பணி மாறுதல் வந்து விட்டப்படியால் வழக்கு கோப்பை பின்னர் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையில் எதிரி சாட்சி பாலனை கட்டையால் தாக்கியதாக உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலிருந்து கருங்கல்லை கைப்பற்றியுள்ளேன். சாட்சி பாலன் என்னிடம் எதிரி சுடுகட்டையால் தாக்கியதாக கூறினார் என்றால் சரிதான். சாட்சிகள் பாலன், தங்கம் ஆகியவர்கள் என்னிடம் பின்னர் எனது மகனை சமாதானம் பேசி எதிரியுடன் அழைத்து சென்றதாக சாட்சிகள் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். 12.12.2021ம் தேதி இரவு 07.15 மணிக்கு சாட்சியின் வீட்டில் வைத்து சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.12.2021ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு ஸ்டேன்லி இறந்த விபரம் தெரிய வந்தது என்றால் சரிதான். 12.12.2021ம் தேதி இரவு முதல் 14.12.2021ம் தேதி ஸ்டேன்லி இறக்கும் வரை எதிரி அவருடன் இருந்ததாக சாட்சிகள் யாரும் என்னிடம் கூறவில்லை. ஸ்டேன்லி இறந்த பிறகு குலசேகரம் வந்ததாக சாட்சி பபி கிளாடிஸ் மற்றும் அவரது கணவர் சிலுவை மணி கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். 13.12.2021ம் தேதி பபி

கிளாடிஸ் குலசேகரம் வந்ததாகவோ, அவரது தம்பியை காணவில்லை என புகார் கொடுத்தாகவோ என்னிடம் கூறவில்லை. ஸ்டேன்லி இறப்பதற்கு முன்னர் அவரது குடும்பத்தாரால் காவல்நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கப்படவில்லை. சாட்சி சபீனா என்னிடம் 13.12.2021ம் தேதி ஸ்டேன்லி ஒரு செல்போனை இரவு 10.00 மணியளவில் அவரது வீட்டின் அருகே எறிந்து விட்டு போனதாக குறிப்பிட்டுள்ளார். அதை சிஜு என்பவர் பார்த்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சட்டமாறுதல் அறிக்கையை 14.12.2021ம் தேதி தாக்கல் செய்தேன். எத்தனை மணிக்கு சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்று துலங்காது. 14.12.2021ம் தேதி 11.30 மணிக்கு பிரேதம் கிடந்த இடத்திற்கு போனேன். குலசேகரம் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்தேன். அதில் ஸ்டேன்லி தென்னை மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது விசாரணையில் இருந்து தென்னை மாத்திரை சாப்பிட்டு இறந்ததாக தெரிய வந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். பிரேத விசாரணை அறிக்கையில் ஸ்டேன்லியை சமாதானம் பேசி இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணையிலும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் 13.12.2021ம் தேதி காலை ஸ்டேன்லி அவரது வீட்டிற்கு வந்ததாகவும் தனது செல்போன் வேறு ஒருவருடன் இருப்பதை வாங்கி விட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகளான வின்செென்னட், ஜாக்சன் டேவிட் ஆகியவர்கள் வீடுகள் ஸ்டேன்லியின் வீட்டின் அருகே இல்லை என்றால் சரிதான். சான்று பொருட்கள் வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஒருதலைப்பட்சமாக விசாரணை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.